மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்தப் பணிகளை எல்லாம் அந்தச் சங்கம் செய்வதாலே புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகள் போவதற்குப் பதிலாக சமுதாய சேவையிலே நல்ல எண்ணம் கொண்டவர்கள் ஆர்வம் கொண்டவர்கள் போவதாலே புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டு புதிய சமுதாயம் உருவாகிக்கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: குடிசைமாற்று வாரியத்தினாலே கட்டப்பட்ட குடியிருப்புகளிலே தேனாம்பேட்டையிலே டெனன்ட்களுக்கு குடிநீர் கிடைக்கவில்லை, இந்த சிறப்பு அதிகாரிகள் மூலமாக குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குடிநீர் போன்ற மற்றக் காரியங்களை எல்லாம் குடிசைமாற்று வாரியமே கவனித்துக்கொள்கிறது. அப்படிப்பட்ட குறைகள் எங்கே இருந்தாலும் நிவர்த்திக்க குடிசை மாற்று வாரியம் முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Out of 15 Resident Welfare Officers, how many are men and how many are women. Since they have to do a lot of work for women, it would be better and helpful if women are appointed as Resident Welfare Officers. May I know whether the Government would consider this and also may I know from the Minister whether the Government is paying any honorarium to them?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்த வரையில் எந்தவிதமான ஹானரேரியமும் தரப்படவில்லை. எவ்வளவு ஆண்கள், எவ்வளவு பெண்கள் என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

Advertisement boards on Slum Clearance tenements

*588 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Slum Clearance Board has permitted the Radha Silk Emporium to put up advertisements on top of the Slum Clearance Quarters at Santhome opposite the All India Radio; and

(b) if so, the details thereof?

1974 மார்ச் 23]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) சாந்தோமில் நொச்சிக்குப்பத்தில் குடிசைமாற்று வாரியம் கட்டியுள்ள குடியிருப்புகளின்மேல் ராதா சில்க் எம்போரியத்தின் விளம்பர பலகையைப் பதிக்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அனுமதியளித்துள்ளது. இதற்காக வாடகை ஆண்டிற்கு ரூ. 3,000 ஆகும். ராதா சில்க் எம்போரியம் இதுகுறித்த ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் பராமரிப்புப் பொறுப்பு ராதா சில்க் எம்போரியத்தைச் சார்ந்ததாகும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இப்படி குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்படும் கட்டடங்களில் விளம்பரப் பலகைகளை வைத்துக்கொள்ள அனுமதி கொடுத்தால் அந்த வாரியத்திற்கு ஏராளமான பணம் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. மத்திய சர்க்காரிலே இப்படிப்பட்ட விளம்பரங்களுக்கு இன்கம் டாக்ஸ் எக்செம்ப்ஷன் கொடுக்கிறார்கள். எனவே நிறைய கம்பெனிகள் இப்படிப்பட்ட விளம்பரங்களை வைக்க பெரும் முயற்சிகளைச் செய்கிறார்கள். எனவே, எங்கெங்கு குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்படும் கட்டடங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இப்படி விளம்பரம் செய்வதற்கு அனுமதி கோரினால் நமது அரசு அனுமதி அளிப்பதற்கு முறைப்படி முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் பல பகுதிகளை நாம் விளம்பரம் பெறுவதற்காக ஒதுக்கியிருக்கிறோம். அதற்குப் பெரிய பட்டியலேகூட இருக்கிறது. அந்த இடங்களில் யார் வேண்டுமானாலும் விளம்பரப் பலகைகளை வைத்துக் கொள்வதற்கு குடிசை மாற்று வாரியத்திடம் அனுமதி கோரி விளம்பரப் பலகைகளை வைத்துக்கொள்ளலாம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்படும் கட்டடங்களில் அழகைக் கெடுக்கும் வகையில் சிலயிடங்களில் அமைந்திருக்கின்றன. ஆகவே, அதற்குத் தனி இடங்களை ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படித் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களுக்குத் தரலாமே தவிர உண்மையிலேயே குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டிருக்கும் மாடிக் கட்டடங்களின் அழகைக்கெடுக்கும் விளம்பரங்களைத் தடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இதுவரையில் வைக்கப்பட்டுள்ள விளம்பரத்தால் எந்தக் கட்டடத்தின் அழகும் கெட்டுவிட்டதாக எனக்குத் தெரியவில்லை. "ரெமுனரேட்டிவ்

ஸ்கீம்'' என்ற வகையில் குடிசை மாற்று வாரியத்திற்குக் கொஞ்சம் லாபம் வரும் வகையில் சில திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால், அதிக விளம்பரங்கள் வந்து சேரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் குடிசை மாற்று வாரியத்தை ஊக்குவிக்கும் வகையில் விளம்பரங்களை ஏற்பாடு செய்வதுகூட நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை–கன்னியாகுமரி பேருந்துகள்

*589 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு போக்கு வரத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்னைக்கும் கன்னியாகுமரிக்கும் இடையே மதுரை, திருநெல்வேலி வழியாக தற்போது ஓடிக்கொண்டிருக்கும் பேருந்து களை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னைக்கும் கன்னியா குமரிக்கும் இடையே மதுரை, திருநெல்வேலி வழியாக தற்போது ஓடிக்கொண்டிருக்கும் பேருந்துகளை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நாகர்கோயிலுக்கும் சென்னைக்கும் இடையே ஓடும் ''லேட்னிங் எக்ஸ்பிரஸ்'' பஸ்ஸுக்கு 28 ரூபாய் கட்டணம், ஆனால் சூப்பர் எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்கு 38 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் இரண்டு பஸ்களுக்கும் இடையே வசதியைப் பொறுத்தவரையில் அல்லது ''ரன்னிம் டைம்ஸ்''-ஐப் பொறுத்தவரையில் எந்தவிதமான வித்தி யாசமுமில்லை. எனவே சூப்பர் எக்ஸ்பிரஸுக்கு உள்ள கட்டணத்தைக் குறைத்து லேட்னிங் எக்ஸ்பிரஸுக்குள்ள சார்ஜை விதிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஒன்று லேட்னிங் எக்ஸ்பிரஸ், இன்னொன்று சூப்பர் எக்ஸ்பிரஸ்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இப்பொழுது சென்னைக்கு கன்னியாகுமரியிலிருந்து, நாகர்கோயிலிலிருந்து பல துரித பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் நெல்லை மாவட்டத் தின் தலைநகரமான திருநெல்வேலியிலிருந்து ஒரு வண்டிகூட சென்னைக்குப் புறப்படவில்லை. அதிகாரிகளும், மற்றவர்களும்